**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தாராபுரம்,**
**முன்னிலை : Ms.மதிவதனி வணங்காமுடி., B.A.,L.L.M.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, தாராபுரம்**
2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04 ம் நாள் புதன்கிழமை
**இ.ம.எண்.5/2024**
**இ.ம.எண்.1154/2015**
**அ.வ.எண்.392/2015**

K.S.கோவிந்தராஜ்

....மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி

..எதிராக..

K.துரைசாமி ...எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி

இம்மனுவானது 20.08.2024 அன்று இறுதியாக என் முன்னர் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்/எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் திரு.S.T.சேகர்.,B.Sc.,L.L.B, வழக்கறிஞர் அவர்களும், எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் திரு.R.சுப்பிரமணியன்.,B.Com.,B.L., வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகி, இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

மனுதாரர் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151 ன்படி இ.ம.எண்.1154/2015 ல் நியமனம் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையருக்கு வாரண்டை (Reissue) செய்யக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்**

மேற்படி வழக்கில் மனுதாரர் பெயரில் வாதி தாவா சொத்துக்களை குறித்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல்



MATHIVATHANI VANANGAMUDI
Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2024.09.04 17:35:40 +0530

செய்துள்ளார் என்றும், எதிர்மனுதாரரது பூமியான ரீ.ச.266/3 க்கு தென்புறத்தில் கிழமேலில் பைபாஸ் ரோடு உள்ளது என்றும், மேற்படி ரோட்டிலிருந்து மனுதாரரது பூமியான ரீசர்வே எண்.266/3 க்கு செல்வதற்கு வாதியின் பூமியான ரீசர்வே எண்.266/3 ல் 77 1/2 செண்ட், இடத்தில் கிழகோட்டில் தென்வடலில் செல்லும் 20 அடி அகல பாதையின் வழியாக தான் செல்ல முடியும் என்றும், மேற்படி 20 அடி அகல தடத்தினை தவிர வேறு தடம் ஏதுவும் இல்லை என்றும், மேற்படி தடத்தினை மனுதாரரது முன்பாத்தியஸ்தர்கள் காலத்திலிருந்து அனுபவித்து வரும் நிலையில் மேற்படி தடம் குறித்து வாதி மற்றும் வாதியின் முன்பாத்தியஸ்தரின் கிரைய ஆவணத்திலும், மேற்படி 20 அடி அகல தடம் தெளிவாக உள்ளது கண்டெழுதப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் மனுதாரருக்கு எந்த ஒரு அறிவிப்பும் கொடுக்காமல் ஆணையர் நியமித்து மனுச் சொத்திற்கு அழைத்து சென்று காட்டியுள்ளார்கள் என்றும், எதிர்மனுதாரர் உண்மையான தடத்தினை மறைத்து வேண்டுமென்றே தடம் இல்லையென்று பொய்யாக சொல்லி மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தடத்தினை ஆக்கிரமிப்பு செய்து மனுச் சொத்தில் தடம் நிலையில் இல்லையென்று ஆணையரை அழைத்து சென்று காட்டியுள்ளார்கள் என்றும், எனவே ஏற்கனவே இ.ம.எண்.1154/2015 ல் நியமனம் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையருக்கு வாரண்ட்டை Reissue செய்யக் கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:**

இந்த வழக்கில் இ.ம.எண்.1154/2015 என்கிற கமிஷனர் நியமன மனுவில் நீதிமன்ற உத்தரவுப்படி ஆணையர் வழக்கு இடத்தை பார்வையிட்டு அறிக்கையும்



MATHIVATHANI VANANGAMUDI
Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2024.09.04 17:35:55 +0530

வரைபடமும் தாக்கல் செய்து உள்ளார் என்றும், ஆணையர் அறிக்கைக்கு, மனுதாரரது தரப்பில் எந்த ஒரு ஆட்சேபணையும் தாக்கல் செய்யவில்லை என்றும், மேற்படியார் இப்போது காலங்கடந்து தாக்கல் செய்துள்ள Re-visit செய்ய கமிஷனருக்கு கமிஷன் வாரண்ட் Re-issue செய்ய கோரவும் எவ்விதமான நியாயமும் இல்லையென்றும், இந்த வழக்கு வாதி தரப்பு சாட்சியங்களும், பிரதிவாதி தரப்பு சாட்சியும் முடிவாகி விட்டது என்றும், ஏற்கனவே கமிஷனர் ரிப்போர்ட் 30.10.2015 ல் தாக்கல் செய்து இ.ம.எண்.1154/2015 முடிக்கப்பட்ட நிலையில் இப்போது Reopen செய்ய எந்த முகாந்தரமும் ஏற்படுவது இல்லை என்றும், எனவே இந்த மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டி எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. இரு தரப்பிலும் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இம்மனுவில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. வழக்கு கோப்புகள் பரிசீலனை செய்யப்பட்டன.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியதா?

<u>5.தீர்வு:-</u>

5.1. இம்மனுவானது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில், தாவா சொத்தை மீண்டும் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்வதற்காகவும், அவருக்கு வழங்கப்பட்ட கட்டளையை Reissue செய்ய வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு கோப்புக்களை பரிசீலித்ததில் எதிர்மனுதார்/வாதி விளம்புகை மற்றும் நிலைக்கால உறுத்துக்கட்டளை



MATHIVATHANI VANANGAMUDI
Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2024.09.04 17:36:09 +0530

பரிகாரத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு தாக்கல் செய்த அன்றே நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அவர் தாவா சொத்தில் உள்ள அம்சங்களை பார்வையிட வேண்டியும், அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி உத்தரவிடப்பட்டிருந்தது, நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

5.2. மேற்படி அறிக்கையின் அடிப்படையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்குள்ள பிரச்சனைகளை முடிவு செய்ய இயலாது, இம்மனுவில் மனுதாரர்/பிரதிவாதிக்கு நீதிமன்ற ஆணையர் மீண்டும் தாவா சொத்தை பார்வையிட்டு, அதன் சுற்றுப்புற அம்சங்களையும் மேற்படி 20 அடி அகல தடத்தினையும் பார்வையிட்டு போட்டா மற்றும் வீடியோவுடன் கூடிய கூடுதல் அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய வேண்டுமென வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், வாரண்ட் Reissue செய்வதற்கான காரணம் எதுவும் சொல்லப்படவில்லை என்றும், வழக்கு வாதுரைக்காக நிலைவையில் இருக்கும் நிலையில் தகுந்த காரணங்கள் சொல்லாமல் 9 வருடங்கள் கழித்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது நிலைக்கத்தக்கதல்ல என எதிர்வாதம் செய்யப்பட்டது.

5.3. இ.ம.எண்.1154/2015 ல் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் 30.10.2015 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு அன்றே மனு முடிக்கப் பெற்றுள்ளது. மேற்படி, ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு, இந்த மனுதாரர் தரப்பில் எந்த ஆட்சேபணையும் வாய்ப்பு அளித்தும் தாக்கல் செய்யப்படவில்லை. மாற்று தடத்தை நிரூபணம் செய்யவே வாரண்ட் Reissue செய்யப்பட வேண்டும் என மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது.



MATHIVATHANI VANANGAMUDI
Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2024.09.04 17:36:23 +0530

5.4. மனு சொத்துக்களை, பார்வையிட வாதி, வாதி வழக்கறிஞர் மற்றும் நீதிமன்ற ஆணையர் மட்டுமே சென்று பார்வையிட்டுள்ளனர். இந்த மனுதாரர்/பிரதிவாதி தாவா சொத்தை பார்வையிடுகையில், அங்கு இல்லை. அவ்வாறான நிலையில், மாற்று தடம் இருந்திருந்தாலுமே வாதி, ஆணையரிடம் காண்பித்திருக்க வாய்ப்பு இல்லை. எனவே, மீண்டும் தாவா சொத்தை பார்வையிட்டு, அதன் சுற்றுப்புற அம்சங்களையும் மேற்படி 20 அடி அகல தடத்தினையும் பார்வையிட்டு போட்டா மற்றும் வீடியோவுடன் கூடிய கூடுதல் அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்வதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் அவர்களது வழக்கறிஞர்களுடன் தாவா சொத்தின் அம்சங்களை நீதிமன்ற ஆணையருக்கு காட்டுவதால் எவ்வித பாதிப்பும் இருதரப்பினர்களுக்கும் ஏற்படப்போவதில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே நீதியின் நலன் கருதி, இந்நீதிமன்றம் மனுதாரர்/பிரதிவாதியின் இந்த மனுவை அனுமதிப்பது உகந்தது என கருதி மேற்படி இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது. திரு.B.தியானேஸ்வரன்,B.A.,B.L., அவர்கள் வழக்கறிஞர் ஆணையராக நியமனம் செய்யப்பட்டு நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் வழக்கறிஞர்களுக்கு அறிவிப்பு கொடுத்து தாவா சொத்தை பார்வையிட்டு அதன் சுற்றுப்புற அம்சங்களையும் மேற்படி 20 அடி அகல தடத்தினையும் பார்வையிட்டு போட்டா மற்றும் வீடியோவுடன் கூடிய கூடுதல் அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்ய வேண்டும் என உத்திரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையரின் நியமனத்



MATHIVATHANI VANANGAMUDI
Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2024.09.04 17:36:39 +0530

தொகையாக ரூ.5,000/- என நிர்ணயிக்கப்படுகிறது. மேற்படி தொகையை மனுதாரர்/பிரதிவாதி செலுத்தவும் உத்திரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யும் நாள் 09.09.2024. நீதிமன்ற ஆணையருக்கான தொகை 09.09.2024-ற்கு முன்பு செலுத்தப்பட வேண்டும். For compliacne call on 09.09.2024

என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்ட பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ஆண்டு செப்டம்பர் மாதம் 04 ம் தேதி என்னால் அவையறியப் பகரப்பட்டது.

MATHIVATHANI VANANGAMUDI
Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2024.09.04 17:36:51 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி
தாராபுரம்.

<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை

MATHIVATHANI VANANGAMUDI
Digitally signed by MATHIVATHANI VANANGAMUDI
Date: 2024.09.04 17:37:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி
தாராபுரம்.